மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA
WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 01 | குரல்: 112 | வள்ளுவர் ஆண்டு 2054 | புதன்கிழமை 20.12.2023 | பக்கங்கள் 08



## ஜனாதிபதி தேர்தல் களமிறங்கும் ரணில்: வலைகள் பின்னப்படுகின்றன!
## குறிகள் வைக்கப்படுகின்றன!!

பக்கம் 02

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு! திகதி அறிவிப்பு!

இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு திருகோணமலையில் திட்டமிட்டபடி இடம் பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



பக்கம் 08



பக்கம் 02

## அரசியலில் இருந்து ஓய்வு! சுமந்திரன் அதிரடி அறிவிப்பு!!

## வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ள ரணில்! ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டம்!

பக்கம் 03





பக்கம் 08

## ராஜபக்சர்களிடையே குழப்பம்..! பதவியை துறந்த பசில் நாட்டைவிட்டும் வெளியேற்றம்!

## யாழில் நிலவும் சீரற்ற காலநிலை 1500இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!



435 குடும்பங்களைச் சேர்ந்த 1523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

பக்கம் 06

## ஆறுபடைஐயப்ப சுவாமியின் 2ம் வருட ஜோதி பூஜை பெருவிழா...! கிழக்கு ஆளுநரும் பங்கேற்பு!



பக்கம் 07

# பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழர்கள்: நீதிமன்றம் வழங்கிய உத்தரவு!

மாவீரர் தின நிகழ்வின் போது பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பை சேர்ந்த 4 பேர் நேற்று வாழச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து உடனடியாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கைது செய்யப்பட்டவர்களின்



கோப்புக்கள் அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்பட்டதை அடுத்து பிணை வழங்கப்பட்டுள்ளது.

பிணை வழங்கியவர்களில் வவுனதீவில் வைத்து கைது செய்யப்பட்ட உயர்தர பரீட்சைக்கு தோற்ற உள்ள ஒரு மாணவர் உட்பட நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**பிணையில் விடுதலை**

மட்டக்களப்பு மாவட்டத்தில்நவம்பர் மாதம் 26, 27ம் திகதிகளில் மொத்தமாக 11 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் இன்றைய தினம் 4 பேருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தல் களமிறங்கும் ரணில்:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வுள்ளதாக சமகால ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது ஜனாதிபதி இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜனாதி பதித் தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இதற்கு அமைச்சர்களின் ஆதரவும் கோரப் பட்டுள்ளது.

**தேர்தல் நடவடிக்கை**

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் நடவடிக்கைகளின் தலைவராக சாகல ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தீவிரமாக களமிறங்கிய ரணில்: பதவிகளில் அதிரடி மாற்றம் ; Im The Prime Minister Candidate Ranil

அதற்காக அவர் தனது தற்போதைய பதவியிலிருந்து விலகுவதாகவும் கடந்த வாரம் தகவல்கள் வெளியாகி இருந்தன.

சகால தற்போது வகிக்கும் பதவிக்கு மற்றொருவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# யாழில் 71 குடும்பங்கள் பாதிப்பு 8 வீடுகள் சேதம்.

யாழ் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கனமழை காரணமாக 71 குடும்பங்களைச் சேர்ந்த 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளதாக" மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜ் தெரிவித் துள்ளார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்"யாழில் கடந்த 24 மணி நேரத்தில் 38.4 மில்லிமீற்றர் அளவிலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதன்காரணமாக சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்" இவ்வாறு ரி.என்.சூரியராஜ் தெரிவித் துள்ளார்.

## போர் தேசத்திற்கு செல்லும் இலங்கையர்கள்!

இஸ்ரேலில் விவசாயத் துறையில் வேலைகளுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் குழு இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளது.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இது தொடர்பான விமான பயணசீட்டுக்களை வழங்கி வைத்துள்ளார்.

30 பேர் கொண்ட முதல் குழுவில் 10 பேர் நேற்றிரவு நாட்டை விட்டு வெளியேறியதாகவும், மற்றைய 20 பேர் கொண்ட குழு நேற்று (19) இஸ்ரேல் செல்லவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

**இஸ்ரேலில் விவசாயத் துறை**

மேலும், சில வாரங்களில் இஸ்ரேலில் விவசாயத் துறையில் பணியாற்ற 10,000 தொழிலாளர்கள் அனுப்பப் படுவார்கள் எனவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இது தொடர்பில் ஏற்கனவே இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் மோஷே ஆர்பெல் மற்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார

## அரசியலில் இருந்து ஓய்வு! சுமந்திரன் அதிரடி அறிவிப்பு!!

இன்னும் இரண்டு மாதங்களில் தனக்கு 60 வயது ஆகவுள்ளதாகவும் 65 வயதில் தான் ஓய்வு பெறவுள்ளதாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் காரைதீவு பொதுச் சபை உறுப்பினர்களின் சந்திப்பு, காரைதீவு தமிழரசுக் கட்சி கிளைத்தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சி கிளைப் பணிமனையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில்

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், இரா. சாணக்கியன் மற்றும் இளைஞர் அணி துணைத் தலைவர் அருள். நிதாஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றம்:



இலங்கை மத்திய வங்கி நேற்றைய நாளுக்கான (19) நாணயமாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 321 ரூபாய் 92 சதம் ஆகவும் விற்பனை பெறுமதி 331 ரூபாய் 64 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 405 ரூபாய் 88 சதம் ஆகவும் விற்பனை பெறுமதி 421 ரூபாய் 55 சதம் அவுஸ்திரேலிய டொலர்

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 349 ரூபாய் 97 சதம் ஆகவும் விற்பனை பெறுமதி 364 ரூபாய் 16 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 238 ரூபாய் 78 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 249 ரூபாய் 38 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 214 ரூபாய் 57 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 224 ரூபாய் 93 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 240 ரூபாய் 06 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 250 ரூபாய் 67 சதம் ஆகவும் பதிவாகியுள்ளது.



**வங்கிகளில் இன்றைய நிலவரம்**

அதேபோல் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளும் டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதிகளை வெளியிட்டுள்ளன.

அதன்படி மக்கள் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 321.18 ரூபாயாகவும் விற்பனைப் பெறுமதி 332.38 ரூபாயாகவும் மாறாமலுள்ளது.

கொமர்ல் வங்கியின் கூற்றுப்படி, அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 319.75 ரூபாயாகவும் விற்பனைப் பெறுமதி 330.75 ரூபாயாகவும் மாறாமலுள்ளது.

சம்பத் வங்கியில், அமெரிக்க டொலரின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதிகள் முறையே , 322 ரூபாய் மற்றும் 331 ரூபாயாக மாறாமலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ள ரணில்! ஆரம்பிக்கப்படவுள்ள புதிய திட்டம்.



பாலியாற்று பாரிய குடிநீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அதிபர் ரணில் விக்ரமசிங்க ஜனவரி 4, 5, 6 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத் திற்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை முன்னெடுக்கும் முக்கிய கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (19) யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்,யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், நீர்ப்பாசன நீர்வழங்கல் முகாமையாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் என். சுதாகரன் பாலியாற்று குடிநீர்த் திட்டம் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார்.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது கைகூடாத நிலையில் கடந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பலனாக அமைச்சரவை இத்திட்டத்திற்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்கள் மீதான தடை! ரணிலின் தவறை சுட்டிக்காட்டும் மனோ!



புலம்பெயர்தமிழர்களுடன் பேசும் அதிபர் ரணில் விக்ரமசிங்க உள்நாட்டில் தமிழருக்கு தவறான சமிக்ஞைகளை தருகிறார் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்ட அறிக்கை யொன்றில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"உலகத்தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து, அழைத்து அதிபர் ரணில் பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்கு தொடர்ந்து தவறான சமிக்ஞைகளை தருகிறார்.

**மாகாணசபை தேர்தல்**

இதில் ஒன்று, மக்களுடன் எந்தவித நேரடி தொடர்புகளும் இல்லாத அமைச்சர் டிரான் அலசின் பேச்சை கேட்டு, எனது தொகுதி கொழும்பில் மீண்டும் காவல்துறை பதிவுகளை ஆரம்பித் துள்ளமை ஆகும்.

இரண்டாவது, வடக்கு கிழக்கிலாவாது மாகாணசபை தேர்தல்களை நடத்தி அங்கே மாகாண சபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்பதாகும்.

மூன்றாவது, பாதீட்டில் ரணில் உறுதியளித்த, மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமையாகும்.

**மூன்று கேள்வி**

அதிபர் ரணில் விக்ரமசிங்கவை கடந்த வாரம் அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் நேரடியாக சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்விகளை எழுப்பி கோரிக்கை விடுத்தேன்.

தற்போது சனத்தொகை புள்ளிவிபர கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக, உங்கள் அமைச்சர் டிரான் அலசின் காவல்துறை தமிழர்களின் வீடுகளுக்கு சிங்களம் மட்டும் படிவங்களுடன் அனுப்பி, சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து, எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதட்டங்களை ஏன் ஏற்படுத்துகிறீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலாவது மாகாணசபை தேர்தல்களை நடத்தி, அங்கே முதற்கட்டமாக மாகாணசபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழுத்து கொண்டே போகிறீர்கள்?

**இலங்கை வீடமைப்பு திட்டங்கள்**

மலைநாட்டு பெருந்தோட்டங்களில், நீங்கள் பாதீட்டில் உறுதியளித்த 10 பேர்ச் காணி துண்டுகளை, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

இந்திய, இலங்கை வீடமைப்பு திட்டங்களின் வீடு கட்டும் பணிகள், அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும்.

ஆகவே காணி வழங்களுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாயை பயன்படுத்தி, காணிகளை பிரித்து வழங்கலாம்.

**காணி வழங்கல் பொறுப்பு**



ஆனால், இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கிறார்கள்?

இந்த கேள்விகளுக்கு அதிபர் ரணில் விக்ரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டு குடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும்.

இவை தொடர்பில் கடந்த வாரம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கா, இந்தியா, சுவிஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதர்களும், முதன்மை அதிகாரிகளும் கலந்துக்கொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்து கூறி இருந்தேன்" என்றார்.

# முல்லைத்தீவில் கொட்டுகிறது மழை மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத் தீவு மாவட்டத்தில் 1586 குடும்பங் களை சேர்ந்த 4806 பேர் பாதிக்கப் பட்டுள்ள நிலையில் 341 குடும்பங் களை சேர்ந்த 1039 பேர் இடைத்தங் கல் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வெளி யிடப்பட்ட தகவல் அடிப்படையில் நேற்று முன்தினம் (18) மாலை 4 மணி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந் தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளி யான், ஒட்டறுத்தகுளம், நட்டாங் கண்டல், பாண்டியன்குளம், செல்வ புரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவ புரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்கு ளம்,விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 286 குடும்பங்களை சேர்ந்த 952 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில்

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, கருவேலன்கண்டல், இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச் சடம்பன், கூழாமுறிப்பு ,கனகரத்தின புரம் ,காதலியார்சமணங்குளம் ,பழம்பாசி, தண்டுவான், ஒட்டு சுட்டான் ,பேராறு ,மணவாளன்பட்ட முறிப்பு , கணேசபுரம்,முத்துவிநாய கபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 354 குடும்பங் களை சேர்ந்த 1076 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலா ளர் பிரிவு

கரைதுறைப்பற்று பிரதேச செயலா ளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப் பளை , தண்ணிமுறிப்பு, முள்ளிய வளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ,கொக்கிளாய் வடக்கு கொக்குத்தொடுவாய் வடக்கு, செம்மலை,தண்ணீரூற்று,கணுக்கே கணி மேற்கு,அளம்பில் வடக்கு,மா மூலை ,அம்பலவன்பொக்கணை, வண்ணாங்குளம் , குமாரபுரம் ,முள்ளியவளை தெற்கு, முள்ளியவ ளை மேற்கு ,அளம்பில் தெற்கு ,உப்புமாவெளி ஆகிய கிராம அலுவ லர் பிரிவுகளை சேர்ந்த 352 குடும்பங்களை சேர்ந்த 1097 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில்

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங் குளம், தேராங்கண்டல், கல்வி ளான் ,மல்லாவி,யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோக புரம் மேற்கு, அம்பலப்பெருமாள் குளம் ,அமைதிபுரம், புத்துவெட்டு வான், பழையமுறிகண்டி, ஐயன் கன்குளம்,துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 254 குடும்பங்களை சேர்ந்த 782 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம்,மாணிக்கபுரம்,உடையா ர்கட்டு வடக்கு,உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் மன்னா கண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 336 குடும்பங் களை சேர்ந்த 887 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர். இதேபோன்று வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையிலே மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 1586 குடும்பங்களை சேர்ந்த 4806 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இடைத்தங்கல் முகாம்களில்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப் பட்ட 6 குடும்பங்களை சேர்ந்த 24 பேரும் புளியங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் உள்ள இடைத்தங்கல் முகாமிலும், பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 69 குடும்பங்களை சேர்ந்த 223 பேரும் கருவேலங்கண்டல் அ.த.க பாட சாலையில் உள்ள இடைத்தங்கல் முகாமிலும், கூழாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களை சேர்ந்த 178 பேரும் கூழாமுறிப்பு அ.த.க பாடசாலையில் உள்ள இடைத்தங்கல் முகாமிலும், முத்துவிநாயகர்புரம் கிராம அலு வலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 45 குடம் பங்களை சேர்ந்த 131 பேரும் முத் துஜயன்கட்டு வலதுகரை மகாவித் தியாலயத்தில் உள்ள இடைத்தங் கல் முகாமிலும், பேராறு கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 23குடும்பங்களை சேர்ந்த 65 பேரும் , பேராறு தமிழ் வித்தியால யத்தில் உள்ள இடைத்தங்கல் முகா மிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்கு தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பத்தை சேர்ந்த 10 பேர் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் கிராம அலுவலர் பிரிவில் பாதிக்கப் பட்ட 135 குடும்பங்களை சேர்ந்த 408 பேருமாக மன்னாகண்டல் அ.த.க பாடசாலையில் உள்ள இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாவட்டத்தில் 7 இடைத் தங்கல் முகாம்களில் 341 குடும்பங் களை சேர்ந்த 1039 பேர் பாதுகாப் பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலாளர்கள் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள்,பிரதேச சபை ஊழியர்கள் ,சுகாதார ஊழியர்கள் , இராணுவத்தினர், கிராம அலுவலர் கள்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவை களை ஏற்பாடு செய்து வழங்கி





# மின் கட்டணம் குறைப்பு? அமைச்சர் கஞ்சன விஜேசேகர!



கடந்த இரண்டரை மாதங்களாக நிலவும் அதிக மழைவீழ்ச்சியை கருத்தில் கொண்டு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மின் கட்டணத்தை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடகப்பிரிவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனவரி மாதத்தில் மின் கட்டண திருத்தம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த ஒக்டோபர் மாத்தில் மின் உற்பத்திக்கான செலவுகள் அதிகளவில் காணப்பட்டமையால் மின் கட்டணம் அதிகரிப்பட்டது.

குறித்த அதிகரிப்பின் பின்னர் மீண்டும் எதிர்வரும் ஏப்ரல் மாத்தத்தில் மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளவே நாங்கள் தீர்மானித்தோம். இருப்பினும் கடந்த இரண்டரை மாதங்களாக நிலவும் அதிக மழைவீழ்ச்சி மற்றும் எதிர்வரும் இரண்டு வாரங்களும் அவ்வாறான காலநிலையே காணப்படும் என்பதால் மீண்டும் மின் கட்டண திருத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு மின்சார சபை எமக்கு அறிவித்துள்ளது. குறித்த மின் கட்டண திருத்தத்தின் போது அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை குறைத்து மழைவீழ்ச்சியினால் கிடைக்கப்பெற்ற நன்மையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்றோம்.

ஆதற்கமைவாக புள்ளிவிபரங்களை பரிசீலித்ததன் பின்னர் ஜனவரி மாதத்திற்குள் மின் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின் படி ஜனவரி மாதத்தில் பொதுமக்களுக்கு மின் கட்டண நிவாரணம் ஒன்றை பெற்றுக்கொடுக்க முடியும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் நிலவும் சீரற்ற காலநிலை 1500இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

435 குடும்பங்களைச் சேர்ந்த 1523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலக பிரிவில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை பல மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக 1866 குடும்பங்களை சேர்ந்த 5588 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



# யாழில் சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு நிகழ்வு!

சர்வதேச கடற்றொழிலாளர் தினத்தினை முன்னிட்டு கடற்றொழில் அமைச்சினால் விசேட நலநிதி கொடுப்பனவுகள் கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் நிகழ்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (19.12.2023) மதியம் 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

உலர் உணவு பொதி

நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவும் தொடர்ச்சியாக சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கு உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்பொழுது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷா நந்த, மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், கடற்றொழில் அமைச் ின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உயரதி காரிகள், கடற்றொழிலா ளர்கள் ,மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழில் தரையிறங்க முடியாமல் திரும்பிச் சென்ற சென்னை விமானம்!




யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்திற்கு இந்தியாவின் சென்னை விமான நிலையத்தில் இருந்து பயணிகளுடன் வந்த விமானமொன்று தரையிறங்க முடியாமல் திரும்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விமானத்தை தரையிறக்க பல முறை முயற்சி செய்தும் மோசமான காலநிலையால் தரையிறங்க முடியாமல் மீண்டும் சென்னை விமான நிலையத்தை நோக்கி பயணித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக 435 குடும்பங்களைச் சேர்ந்த 1523 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 24 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலக பிரிவில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 205 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரும், உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அன்னை முன்பள்ளி நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆறுபடைஐயப்ப சுவாமியின் 2ம் வருட ஜோதி பூஜை பெருவிழா...! கிழக்கு ஆளுநரும் பங்கேற்பு.



ஆறுபடை ஐயப்ப சுவாமியின் இரண்டாம் வருட ஜோதி பூஜை பெருவிழா கொட்டகலை சீ.எல்.எப் வளாகத்தில் இடம்பெற்றது.
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் தலைமையில் இடம்பெற்ற இப்பூஜைக்கு கடந்த ஒரு வருட காலமாக சபரிமலை மாலிகைப்புரம் மேல்சாந்தியில் ஐயன் ஐயப்ப சுவாமிக்கு பூஜை செய்து வந்த உயர்திரு பிரம்மஸ்ரீ எம்.என். ரெஜிகுமார் நம்பூதிரி (கேரளா-இந்தியா), உயர்திரு பிரம்மஸ்ரீ ஹரிஹரன் நம்பூதிரி (கேரளா-இந்தியா) ஆகியோரால் விசேட பூஜையும் இடம்பெற்றது.

மேலும் இப்பெருவிழாவினை சிறப்பிக்கும் முகமாக விசேட சொற்பொலிவாளர் ஸ்ரீ "மஹாதாஸ்த்ரு ப்ரியதாஸன்" ஸ்ரீ.வீ.அரவிந்த் ஸுப்ரமண்யம் (கோவை-தமிழ்நாடு) அவர்களின் சொற்பொழிவும், தென்னிந்தியாவின் பிரபல பக்தி பாடகர் அருளிசை ஸ்ரீஹரி அவர்களின் பஜனை கச்சேரியும் இடம்பெற்றது.

இந்த பெருவிழாவில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், இலங்கை வாழ் ஐயப்ப குருசுவாமிமார்கள், சுவாமிமார்கள்,பக்த மெய்யடியார்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.



# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு! திகதி அறிவிப்பு!



இலங்கை தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு திருகோண மலையில் திட்டமிட்டபடி இடம் பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு ஜனவரி மாதம் 27, 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள் ளதாகவும் அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந் துள்ளதாகவும் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

**மத்திய குழு கூட்டம்**

இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் திருகோண மலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான, எம்.ஏ. சுமந்திரன், சாணக்கியன், சிறீதரன், மற்றும் மாவை சேனாதிராஜா, தவராசா கலையரன், சீ.விகே சிவஞானம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

**புதிய தலைவர் தெரிவு**

இதன் போது, கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 2024 ஜனவரி 21 ஆம் திகதி பொதுச் சபை கூடி தலைவர் மற்றும் நிர்வாகிகளை தெரிவு செய்ய உள்ளதாகவும், 26 ஆம் திகதி மத்திய செயற்குழு கூட உள்ளதாகவும் 27ம் திகதி பொதுக்கூட்டம் இடம்பெற உள்ளதுடன் 28 ஆம் திகதி இலங்கை தமிழரசு கட்சியின் 17 வது தேசிய மாநாடு இடம் பெற உள்ளதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

# ராஜபக்சர்களிடையே குழப்பம்..!
## பதவியை துறந்த பசில், நாட்டைவிட்டும் வெளியேற்றம்.



பொதுஜன பெரமுன அமைப்பின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ திடீரென அமெரிக்கா சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன, அதன்படி பசில் ராஜபக்ச டுபாய் வழியாக அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு புறப்பட்டு சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொதுஜன பெரமுன மாநாட்டில் பசில் ராஜபக்ச தேசிய அமைப்பாளர் பதவியை விட்டு விலக தீர்மானித்ததையடுத்து அந்த பதவியை வெற்றிடமாக வைக்க கட்சி தீர்மானித் திருந்தது. அதேசமயம் பசில் ராஜபக்ச அமெரிக்காவில் சுமார் ஒன்றரை மாதங்கள் எனவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன, இதேவேளை பத்தரமுல்லை - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தை சூழவுள்ள பகுதியில் திடீரென பலத்த காவல்துறை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சி காரியாலயத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, 30 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தலங்கம காவல் நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் இருண்ட தருணம்! இந்திய அமைச்சர் வெளியிட்ட தகவல்.

இந்தியாவின் உதவியால், இலங்கையின் இருண்ட தருணத்தில் முக்கியமான மாற்றம் ஏற்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை உறவு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"இந்திய தேசம் ஒரு பிராந்திய தலைமை தேசமாக மாத்திரமல்ல, அதன் அண்டை நாடுகளுக்கு, குறிப்பாக இலங்கையின் அண்மைய பொருளாதார நெருக்கடியின் போது ஒரு முக்கியமான உயிர்நாடியாக செயற்பட்டது.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவையும், உலகின் பிற நாடுகள் என்ன செய்வது என்று விவாதித்துக் கொண்டிருந்தபோது உண்மையில் இந்தியாவே இலங்கைக்கு உதவி செய்தது எனவும்" அவர் எடுத்துரைத்துள்ளார்.